Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 214 | செவ்வாய்க்கிழமை 28 ஜூன் 2022 | ஆனி 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50




## ஜூலை 10 ஆம் திகதி வரை

# அத்தியாவசிய சேவைக்கு மாத்திரமே எரிபொருள்!

- ஏனைய துறையினர் வீட்டிலிருந்து பணியாற்றவும்
- நகரப் பாடசாலைகள் மூடப்படும்
- மாகாணப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும்
- ரயில், இ.போ.ச. சேவை தொடரும்
- இது பொதுமுடக்கம் அல்லவாம்

### அமைச்சரவைப் பேச்சாளர்கள் நேற்றுமுன்னிரவு விசேட ஊடக சந்திப்பில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 28**

**இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் ஜூலை 10 ஆம் திகதிவரை அத்தியாவசிய சேவைகள் மாத்திரமே முன்னெடுக்கப்படும் எனவும், அதற்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே விநியோகிக்கப்படும் எனவும் அரசாங்கம் நேற்று இரவு அறிவித்துள்ளது.** 15 ➤

## எரிபொருள் அட்டைக்கு இராணுவம் ஒத்துழைப்பு

### யாழ். மாவட்டச் செயலக கலந்துரையாடலில் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
எரிபொருள் விநியோகத்துக்காக யாழ். மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ள எரிபொருள் 14 ➤

## ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் தூதுவருடன் கோத்தா சந்திப்பு

கொழும்பு, ஜூன் 28
ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர்கள் இருவர் 15 ➤

### பருத்தித்துறை சாலை தவிர்ந்த

## வ.பி.போ.ச. ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தொழிற்சங்கங்கள் நேற்று ஆரம்பித்த பணிப் புறக்கணிப்பு 14 ➤

## யாழில் காணாமற்போன மாணவி கிளிநொச்சியில் மீட்கப்பட்டார்

### சந்தேகநபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணத்தில் காணாமற்போன 17 வயதான மாணவி கிளிநொச்சிப் பகுதியில் பொலிஸாரினால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் வசிக்கும் 17 வயதான மாணவி, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண 15 ➤

## 82% மின்கட்டண அதிகரிப்பு யோசனை நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 28
மின்சாரக் கட்டணத்தை 82 சதவீதமாக அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. 57 சதவீதத்துக்கு மேல் கட்டணத்தை உயர்த்த முடியாது என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 15 ➤

### முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு

## சிங்கள மக்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 28
பொதுப்பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கொழும்பு பத்தரமுல்ல சந்தியில் எரிபொருள் வரிசையில் நின்ற சிங்கள மக்கள் கடும் எதிர்ப்பு 15 ➤

மாதாந்தம் சிறியதொரு தொகையை சேமித்து
ரூ. 1 மில்லியன் சேமிப்போமா?



5 வருடங்களில் ரூ. 1 மில்லியன் தொகையை சேமிக்க மாதாந்தம் ரூ.14,100 ஐ வைப்பிலிடுங்கள்.
இப்பொழுதே செலான் வங்கியின்
Seylan myplan Begin Your Ascent
சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
அருகிலுள்ள செலான் வங்கி கிளைக்கு வாருங்கள் அல்லது 011 200 88 88 ஐ அழையுங்கள்
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு அகழ்வை நாட்டில் விரிவாக்குக

## கோப் குழு அறிவுறுத்து

**கொழும்பு, ஜூன் 28**

**நாட்டின் நிலப்பகுதிக்குள் அகழ்வுகளை மேற்கொண்டு எரிவாயு மற்றும் மசகு என்னெயைப் பெற்றுக் கொள்வதற்காக விரிவான தகவல்கள் அடங்கிய வழிகாட்டல்களைத் தயாரிக்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரி களுக்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோப் குழு) பரிந்துரைத்துள்ளது.**



அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் கூடிய போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு இவ்வாறு பணிப்புரை வழங்கப்பட்டது.

இலங்கையில் திட்டமிடப்பட்டுள்ள இயற்கைத் திரவ எரிவாயுத் திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளித்த அமைச்சின் அதிகாரிகள், இந்த அகழ்வாராய்ச்சிகளுக்குப் பல்வேறு தடைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். எனினும், இந்த அகழ்வுகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நாட்டின் தேவைக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த அகழ்வுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் கோப் குழு ஆலோசனை வழங்கியது. (ம)

# கடந்த 5 மாதங்களில் 5 பில்லியன் டொலர்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் ஏற்றுமதியானது 2022ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் 5 பில்லியன் அமெரிக்க டொலரைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை சுங்கத் தரவுகளுக்கு அமைவாக, மே மாதத்தில் மட்டும் 980.2 மில்லியன் அமெரிக்க டொலர் பதிவாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (எ-இ)

# மருந்துகள் பெறுவதற்கு புதியமுறை நடைமுறை

கொழும்பு, ஜூன் 28

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் தொடர்பிலும் அவை விநியோகிக்கப்படும் இடம் தொடர்பிலும் தகவல்களை வழங்க புதிய முறைமை ஒன்று அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

டொலர் நெருக்கடி காரணமாக பல அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு அரச மருத்துவமனைகளிலும், தனியார் மருந்தகங்களிலும் தட்டுபாடு நிலவுகின்றது.

இதன்காரணமாக, நோயாளர்கள் முகங்கொடுக்கும் அசௌகரியம் மற்றும் இன்னல்களை கருத்திற்கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் தொடர்பில் 045 22 75 636 என்ற இலக்கத்துக்கோ அல்லது 077 19 77 177 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கோ தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என அகில இலங்கை மருந்தக உரிமையாளர் சங்கத் தலைவர் சந்திக கன்கந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் இல்லாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பில், ஆராய்வதற்கான தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சுவசரிய தகவல் சேவையின் 1999 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# எரிபொருள் பற்றாக்குறையால் ரயில் சேவைக்கு நெருக்கடி!

கொழும்பு, ஜூன் 28

தற்போதைய எரிபொருள் நெருக்கடி தொடருமானால் ரயில் சேவைகள் பாதிக்கப்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடி காரணமாக ரயில் திணைக்களத்தின் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவரான சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

நிதி, போக்குவரத்து மற்றும் எரிபொருள் பிரச்சினைகளால் தற்போது அதிகளவான மக்கள் ரயில்களை பயன்படுத்துகின்றனர். அண்மைக் காலமாக ரயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு, ரயில் கட்டணங்கள் குறைவாக உள்ளமைதான் முக்கிய காரணம். ஆயினும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் ரயில்வே திணைக்களம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# பதில் கல்வி அமைச்சர் பந்துல



கொழும்பு, ஜூன் 28

போககுவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, பதில் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உத்தியோகபூர்வ பயணமாக வெளிநாடு சென்றுள்ளதால், பந்துல குணவர்த்தன பதில் கல்வி அமைச்சராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பந்துல குணவர்த்தன 2005ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரையில் கல்வி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் மீண்டும் வீதியில் இறங்குவார்கள்

## பொதுஜன பெரமுன எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 28

நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிடின் மக்கள் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தொழிற்துறை தரப்பினருடன் நடத்திய சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு எதிர்க்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது. பிரச்சினைகளுக்கு தீர்வு காண சர்வக் கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று பல தரப்பினர் முன்வைத்த யோசனைகளை தவறாக விளங்கிக் கொண்டமையே அரசாங்கத்தின் தோல்விக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.

நாட்டின் பிரச்சினை தொடர்பில் பிரதமர், அமைச்சர்கள் உட்பட அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர் எவரும் கருத்துரைப்பதில்லை. ஜனாதிபதியும் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதில்லை. பிரச்சினைக்கு தீர்வுகாண அவதானம் செலுத்தாமல் இருந்தால் நாட்டு மக்கள் மீண்டும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிக்கிறங்குவார்கள்.

நாடாளுமன்றில் பலமில்லாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். சிறிலங்கன் விமான சேவை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நட்டமடையும் அரச நிறுவனங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என அரசாங்கம் குறிப்பிட்டாலும் அது தொடர்பாக அவதானம் செலுத்தப்படவில்லை.




எரிபொருள், எரிவாயு விநியோகத்தில் காணப்படும் சிக்கல் நிலைமை, மின்சார விநியோகத் தடை, அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை ஆகியன குறித்து அரசாங்கம் இதுவரை அவதானம் செலுத்தவில்லை -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய ராஜபக்சவுக்கு அரச நிர்வாகம் தெரியாது!

## பதவிக்குக் கொண்டுவந்த ஆனந்த தேரர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 28**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதன் சாபத்தை தற்போது எதிர்கொள்கின்றோம் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதியால் அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது என்பது உறுதியாகி விட்டது. சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கை மக்கள் என்றும் இல்லாதவாறு மிக மோசமான அவல நிலையைத் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள். பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆடம்பர வாழ்க்கையை மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆடம்பர வாழ்க்கையல்ல தற்போது ஒருவேளை உணவை பெற்றுக் கொள்வதுகூடப் பெரும் போராட்டமாக உள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம் என்பது உண்மை. அதை மறுக்கவில்லை. அதன் சாபத்தை தற்போது எதிர்க்கொள்கிறோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நிர்வாகம் தொடர்பில் இதுவரை நாம் எதையும் குறிப்பிடவில்லை. தற்போது குறிப்பிடுவதற்கான காலம் உதயமாகியுள்ளது.

இலங்கை மக்கள் உணவுக்காக போராடும் நிலையும், பெற்ற பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் பிள்ளையை தாய் ஆற்றில் எறியும் நிலைமையும் இலங்கை வரலாற்றில் இதுவரை தோற்றம் பெறவில்லை. மிகவும் மனவேதனையுடன் உள்ளோம்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு தீர்வு காணாவிடின் நாட்டின் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழியும். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாமல் போயுள்ளது. பிரச்சினைகளுக்கு முடிந்தால் ஜனாதிபதி தீர்வு காண வேண்டும் இல்லாவிடின் பதவிவிலக வேண்டும்.

தற்போதைய நிலையில் யார் ஜனாதிபதி, யார் பிரதமர் என்பது எமக்கு முக்கியமல்ல.

நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு அவசியம் -என்றார். (எ-இ)

# காட்டுமிராண்டித்தனங்களை பரப்பியோருக்குச் சுதந்திரம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



காட்டுமிராண்டித்தனத்தையும் வன்முறையையும் உருவாக்கிய ராஜபக்சக்களும் அவர்களின் கும்பலும் இப்போது சுதந்திரமாக நடமாடுகின்றன. ஆனால், இந்த நாட்டு மக்களுக்காக சிறந்த எதிர்காலத்தை வேண்டி போராடியவர்கள் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது வரையிலான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள போராட்டத்துடன் தொடர்புடைய இளைஞர்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக, வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

போராட்டத்தின் நோக்கங்கள் இன்னும் உயிர்ப்புடன் உள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன அந்த நோக்கங்களுடன் மாற்றமின்றி பயணிக்கின்றன. காட்டுமிராண்டித்தனமான ராஜபக்ச வாதம், மற்றும் அரச பயங்கரவாதம் என்ற இரண்டையும் நிராகரிக்கின்றோம். ராஜபக்சக்களின் பங்கேற்புள்ள எந்தவொரு அரசாங்கத்திலும் நாங்கள் அங்கம் வகிக்கப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ராஜபக்ச நினைவாலயத்தை சீரமைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 28

அம்பாந்தோட்டையில் உள்ள ராஜபக்ச அருங்காட்சியகம் மற்றும் ராஜபக்சக்களின் பெற்றோர் நினைவாலயம் என்பவற்றைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையில் மேற்படி அருங்காட்சியகமும் நினைவாலயமும் இடித்தழிக்கப்பட்டன. இந்த நிலையிலேயே அவற்றை மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-இ)


வாடிக்கையாளரின் நலன்கருதி வீட்டிலிருந்தே விளம்பரங்களை உதயனுக்கு அனுப்பும் வசதி!

எரிபொருள் நெருக்கடியால் உங்கள் அபிமான உதயன் பணிமனைக்கு வந்து விளம்பரங்களை கையளிக்க முடியாதுள்ள நடைமுறைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில்.



இனிமேல் நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தபடியே உதயனுக்கு விளம்பரங்களை மின்னஞ்சல்/ வட்ஸப்/ வைபர் போன்றவற்றின் ஊடாக அனுப்பி வைக்க

விளம்பரக் கட்டணத்தை, வங்கிகளில் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமோ வைப்பிட்ட உறுதிச்சீட்டையின் புகைப்படத்தை அனுப்பிவைப்பதனூடாக விளம்பரம் பிரசுரமாவதை உறுதி செய்யலாம்.

வைபர், வட்ஸப் ஊடாக விளம்பரங்களைச் செம்மை பார்க்கும் வசதியும் வழங்கப்படும்.

விளம்பரங்களை அனுப்பவேண்டிய

077 120 9996

மின்னஞ்சல்: advt@uthayan.com





**ஆ**க்களுக்கு ஏதும் ஆபத்து எண்டால், அவையை ஆஸ்பத்திரிக்கு ஏத்தி கொண்டு போக அம்புலன்ஸ் ஓடிவரும். ஆனால் அம்புலன்ஸுக்கே ஆபத்து எண்டால் என்ன செய்யமுடியும். வடக்கில தான் இப்பிடி சில அம்புலன்ஸுகளுக்கு ஆபத்து வந்திருக்கு. அதுவும் தன்னால வரேலை. எங்கட அதிகாரிமார் நிலைமை விளங்காமல், நாட்டு நடப்புத் தெரியாமல் ரூல்ஸைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு நிக்கிறதாலதான் இப்பிடியொரு நிலைமை வந்திருக்குதாம்.

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அம்புலன்ஸுகளுக்கெண்டு ஒவ்வொரு வருசமும் குறிப்பிட்ட காசு ஒதுக்குவினம். அப்பிடி போனவருசக் கடைசியில போட்ட பட்ஜெட் படிதான் அம்புலன்ஸுகளுக்கு காசு தர ஏலுமெண்டும், அதால அம்புலன்ஸுகளை ஓடுறதை அதுக்கேத்த மாதிரிக் குறைக்கச் சொல்லியும் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்காம். உண்மையா உவையள் நாட்டில என்ன நடக்குதெண்டு அறிஞ்சுதான் இப்பிடி ஒரு ஓர்டரைப் போட்டிருப்பினமோ? ஏனெண்டால் போனவருசக் கடைசியில அம்புலன்ஸுகளுக்கு காசு ஒதுக்கேக்க டீசல், பெற்றோல் என்ன விலை, இப்ப என்னவிலை? கிட்டத்தட்ட மூண்டு மடங்கை விட இப்ப எரிபொருளுகளின்ர விலை கூடிப்போய் கிடக்கு. அப்பிடியெண்டால், வழக்கமா அம்புலன்ஸ் ஓடுறதைவிட மூண்டு மடங்கு குறைச்சால்தான் இவையள் போட்ட பட்ஜெட்டுக்குள்ள அடங்கும்.

ஆனால் சனங்களுக்கு இப்பதான் அம்புலன்ஸ் தேவையும் கூட. முந்தி எண்டால், ஏதும் அந்தர அவசரத்துக்கு வருத்தக்காரரை வீட்டில இருக்கிற கார், மோட்டர் சைக்கிள்களில ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போவினம். ஆனால் இப்ப பெற்றோல் வாங்கிறதே உயிர்போற அலுவல் மாதிரிக் கிடக்கு. இந்தச் சீத்துவத்துக்கை எப்பிடி வீட்டு வாகனங்களை ஓட முடியும். அதால கூடுதலா எல்லாரும் சீரியஸா இருக்கிற வருத்தக்காரரை ஏத்த, அம்புலன்ஸைத்தான் கூப்பிடுகினம். அப்பிடிச் சனம் அவசரத்துக்கு கூப்பிட்டால், அந்த ஆபத்து நேரத்தில போய், உயிரைக் காக்கிற வேலையைச் செய்யத்தானே அம்புலன்ஸுகள் இருக்குது. அப்பிடி அவசியமான அம்புலன்ஸுகளை, போன வருச ஒதுக்கீட்டுக்கு ஏத்தமாதிரி, 'சிக்கனமா' ஓடுங்கோ எண்டால் என்னத்தை ஓடுறது? இப்பிடி அம்புலன்ஸில சிக்கனத்தைக் காட்டாமல்,பெரிய அதிகாரிமாரின்ர வாகனங்களின்ர ஓட்டத்தைக் குறைக்கலாமே?



\- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# படுமுட்டாள்களைப் போன்று நான் செயற்பட மாட்டேன்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜுன் 28**

**இலங்கையில் கடந்த தேர்தல் காலங்களில் ராஜபக்ச குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளால் தான் நாடு இன்று மோசமான பொருளாதார நெருக்கடி களைச் சந்தித்துள்ளது. நானும் அவர்கள் போல் பொய் வாக்குறுதிகளை வழங்கி 'படுமுட்டாள்' என்ற பெயரைக் கேட்க விரும்பவில்லை இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிர முசிங்க தெரிவித்தார்.**

'நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்த வருடத்துக்குள் தீர்வு கிடைக்குமா?' என்று பிரதமரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு ராஜபக்ச குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களின் கட்சிக்குப் பெரும்பாலான மக்கள் வாக்களித்து அவர்களை ஆட்சிப் பீடம் ஏற்றினார்கள். ஆனால், இறுதியில் நடந்தது என்ன? எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. ஆணை வழங்கிய மக்களே ராஜபக்ச குடும்ப ஆட்சி வேண்டாம் என்று போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

நானும் ராஜபக்ச குடும்பத்தினர் மாதிரி பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கத் தயாரில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்த வருடத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கனவிலும் நினைக்கவே கூடாது.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் நான் கூறியது போன்று பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றரை வருடங்களாவது தேவை. அதே வேளை, சர்வதேசமும் தொடர்ந்து உதவிகளை வழங்கினால்தான் குறித்த காலப்பகுதிக்குள் நாட்டை மீட்டெடுக்கமுடியும்.

நான் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து நாட்டு மக்களுக்கு உண்மை நிலவரத்தைத்தான் கூறிவருகின்றேன். எனது கருத்துக்களை எடுத்துக் காட்டி எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். பிரச்சினைகளையும், இயலாமைமையும் கூறும் பிரதமர் எதற்கு என்று அவர்கள் பிரசாரம் செய்கின்றனர். இது அவர்களின் சிறுபிள்ளைத்தன அரசியலைக் காட்டுகின்றது - என்றார். (எ-22)

# ரணிலின் ஆட்சியில் கடன்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 28

பிரதமரும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் கீழ், இலங்கை மிக குறுகிய காலத்தில் பெருந்தொகை வெளிநாட்டு கடனை பெறத்திட்டமிட்டுள்ளது என்று சர்வதேச ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த ஆறு மாதங்கள் நாடு நின்று போகாமல் இயங்க வேண்டுமாயின் குறைந்தது 5 ஆயிரம் மில்லியன் டொலரைக் கடனாக பெற்றுக்கொள்ள வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். வெளிநாட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்துவதை உத்தியோகபூர்வமாக நிறுத்தியுள்ள பின்னணியில் இந்தளவு பெருந்தொகைப் பணத்தை எவ்வாறு கடனாக பெறமுடியும் என்ற தகவலை ரணில் வெளியிடவில்லை.

ஏற்கனவே இந்தியாவின் வர்த்தகக் கடன்களின் கீழ் எரிபொருள் உட்பட அத்தியவசிய பொருள்களை பெற்றுக்கொள்வதற்கான சில உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் இந்திய ஒன்றிய அரசாங்கம் இதன் ஊடாக இலங்கைக்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்து வருகிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னர் நிதியமைச்சையும் பொறுப்பேற்றார். எனினும் நாடு தற்போது எதிர்நோக்கும் கடும் மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய எந்த திட்டங்களையும் இதுவரை முன்வைக்கவில்லை. இந்தநிலையில் அவர் வெளிநாட்டுக் கடன்களை பெறப் பல்வேறு நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றார் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# மேல் மாகாணத்தில் 283 ஏக். விவசாயம்

கொழும்பு, ஜுன் 28

மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள 283 ஏக்கர் காணிகளில், காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் வெற்று நிலங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பயன்படுத்தி விரைவாக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அதன் ஒரு கட்டமாக இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள 188 ஏக்கர் நிலத்தில் விரைவாக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப் படவிருப்பதோடு ஏற்கனவே 94 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெல் மற்றும் குறுகிய காலப் பயிர்களை இந்த நிலங்களில் பயிரிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-இ)



இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திர குழுவினர் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இலங்கை வளமான எதிர்காலத்தை அடைவதற்கு அமெரிக்காவின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# பிரதமர் ரணிலின் காலம் முடிகிறது

## ஐக்கிய மக்கள் சக்தியின் காவிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 28

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் காலமும் முடிவடைகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

'பிரச்சினைகளைத் தீர்ப்பதாக பிரதமர் கோரிய கால அவகாசம் இன்னும் சில நாள்களில் முடிவடைகின்றது. பிரதமரின் தலைவிதியை பசில் தரப்பு தீர்மானிக்கும். எரிபொருளின் விலைகள் 50 ரூபா, 100 ரூபாவில் அதிகரிக்கும் போது பிரதமர் என்ன செய்கின்றார் என்பது கேள்விக்குறி' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# விலங்கியல் பூங்காவுக்கு திறைசேரி நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜுன் 28

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் வனவிலங்கு அமைச்சிடம் நிதி கோரியதைத் தொடர்ந்து, விலங்குகளுக்கு உணவு வழங்க 20 மில்லியன் ரூபாவை வழங்க திறைசேரி ஒப்புக்கொண்டுள்ளது.

வனவிலங்கு அமைச்சில் பணம் இன்மையால் வன ஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தேவையான நிதியை திறைசேரியிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# வரிசைகளிலிருந்து வெளியேறி அரசை விரட்ட இணையுங்கள்

## ஜே.வி.பி. பெண்கள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜுன் 28

கோத்தாபய, ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் எவரும் பொதுமக்களின் எதிரிகள் என மக்கள் விடுதலை முன்னணியின் பெண்கள் பிரிவான உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் ஊடகவியலாளர்களிடம் நேற்றுமுன்தினம் கருத்து தெரிவித்தபோதே உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் தலைவி சரோஜினி சாவித்திரி போல்ராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்ப்பலிகளுக்கு வழிவகுத்த நீண்ட வரிசைகளை விட்டு வெளியேறி, அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்போக்கு சக்திகளுடன் சேரவேண்டும்.

வாரத்தில் ஐந்து நாள்கள் பாடசாலைகளைத் திறக்க முடியாத இந்த அரசால் என்ன பயன்?. பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் நிலையில், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதால் எந்தப் பயனும் இல்லை. நெருக்கடிகளுக்குத் தீர்வு காணக்கூடிய கொள்கைகளை மக்கள் தெரிவு செய்யும் வகையில் அரசாங்கம் பதவி விலகவேண்டும். இப்போது, இந்த அரசாங்கத்திடம் எந்த தீர்வுகளும் இல்லை, ஆனால் பதவி விலக அரசாங்கம் தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்கள் வீதிக்கு இறங்கி அவர்களை வீட்டுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை.

ரணில் விக்கிரமசிங்க தாம் நாட்டை காப்பாற்றும் திறன் கொண்டவர் என தெரிவித்துள்ளார். நாட்டுக்கு டொலரைச் சம்பாதிப்பதற்காக அரசாங்கத்தில் இணைந்து கொண்டதாக தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். அவர்களால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. (ம-14-159)

# திருக்கேதீச்சர ஆலய மஹா கும்பாபிஷேகம்

மன்னார், ஜூன் 28

திருக்கேதீச்சர நாதர் திருக்கோயிலின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு கர்மாரம்பம் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணி வரை எண்ணெய்க்காப்பு இடம்பெறும் என்று ஆலய திருப்பணிச்சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14)

# நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 28

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது -என்றுள்ளது. (ம)

# அபிவிருத்தி என்று தெரிவித்து வடக்கை விற்பதற்கே முயற்சி

## மன்னார் மீனவ சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 28

**தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அபிவிருத்தி என்று கூறி வடக்கை இந்தியாவுக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட மீனவ சங்கத் தலைவர் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.**



நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வியாழக்கிழமை ஒரு இந்தியக் குழு ஒன்று மன்னார் மாவட்டத்தில் அதானி குழுமம் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து சென்றிருக்கின்றது.

இலங்கையிலுள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்த இலங்கை அரசுக்குத் தெரியவில்லை. காலத்துக்கு ஏற்றவாறும் எதிர்காலத்தை கவனத்திற்கொண்டும் தீர்மானங்கள் எடுக்கப்படாமையால் நாடு வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

தற்போதைய அரசாங்கம் நாட்டைக் கூறுபோட்டு ஒவ்வொரு பகுதியாக விற்றுக்கொண்டிருக்கின்றது. அதானி இந்தியாவின் பெரும் பணக்காரர். அவரது திட்டங்களுக்கு இந்தியாவிலேயே பெரும் எதிர்ப்புக்கள் இருக்கின்றன. அவரிடம் இப்போது வடக்கை விற்கப் போகின்றார்கள். அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கை இந்தியாவுக்கு விற்கவே திட்டமிடுகின்றனர் -என்றார். (எ-26)

# 6 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 வயதான சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொண்டாட்ட நிகழ்வொன்றில் உறவினர் ஒருவரால் குறித்த சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-27)



# 3,000 லீற்றர் டீசல் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஜூன் 28

வவுனியா, வேப்பங்குளத்தில் 15 பரல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வவுனியா பொலிஸ் விசேட பிரிவினர், இரும்பகம் ஒன்றைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

டீசலைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

# கள் போத்தல்களுடன் இருவர் நேற்றுக் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 28

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கள் போத்தல்களை அனுமதிப்பத்திரமின்றி படகில் ஏற்றிச் செல்ல முற்பட்ட இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவு இறங்குதுறைப் பகுதியில் கள் போத்தல்களை அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக படகில் எடுத்துச்செல்வதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது நயினாதீவு பகுதியைச் சேர்ந்த 44 மற்றும் 38 வயதான இருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்து ஆயிரத்து 722 கள் போத்தல்களும் அவற்றைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட படகும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ம-14-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அலுவலர்களில்

# எரிபொருளைப் பெற்றவர்கள் கடமையில் நேர்த்தி காட்டுக

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**வடக்கு மாகாணத்தில் தமது கடமைகள் நிமித்தம் எரிபொருளைப் பெற்ற அரச துறையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றிச் செல்ல வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண சாரதிகள், காப்பாளர்கள் தாம் கடமைக்கு செல்வதற்குரிய எரிபொருளை உரிய தரப்பினர் தமக்கு பெற்றுத் தரவில்லை என நடத்திய ஊடக சந்திப்பை அடுத்தே ஆளுநர் இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்கள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளேன். அவர்களுக்கான எரிபொருளை தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தமது கடமைகளை காரணமாகத் தெரிவித்து எரிபொருளை பெற்றவர்கள், தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ய-27)

மட்டக்களப்பில்



# எரிபொருள் வழங்கக்கோரி ஆசிரியர்கள் போராட்டம்!

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பில் அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து, தமக்கு எரிபொருள் வழங்குமாறுகோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேசசபை முன்பாக சுமார் இரண்டரை மணிநேரம் நேற்று இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை வழமைபோன்று இயக்குமாறு மாகாணப் பணிப்பாளர் அறிவித்த நிலையில், பாடசாலைக்கு செல்வதற்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் இன்மையால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் தங்களுக்கு உரிய எரிபொருளை வழங்கக்கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ய-150)

மன்னாரைச் சேர்ந்த

# முதியவர்கள் இருவர் தமிழகத்தில் தஞ்சம்

## மயக்கமடைந்த நிலையில் மீட்பு

சென்னை, ஜூன் 28

இலங்கையில் இருந்து அகதிகளாகச் சென்ற இரு முதியவர்கள் தமிழகக் கரையோரத்தில் நேற்று அதிகாலை மீட்கப்பட்டனர் என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரே இவ்வாறு அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர்.

மன்னாரில் இருந்து சென்ற இருவரும் தமிழகம் சென்றடைந்தபோதும் இயலாமை காரணமாக மயக்கமுற்ற நிலையில், தனுஸ்கோடிக் கரையில் வீழ்ந்து கிடந்துள்ளனர். அதன்பின்னரே தமிழகப் பொலிஸாரால் இருவரும் மீட்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. (ம-14-20)



தாம் கடமைக்கு வர தமக்கு பெற்றோல் வழங்கக் கோரி இலங்கை போக்குவரத்துசபையின் பருத்தித்துறை சாலையினர் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ய-20)

சட்டவிரோதமாக

# ஆஸி. செல்லமுற்பட்ட 54 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூன் 28

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமுற்பட்ட 54 பேர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு பாலமீன்மடு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-ய)

# கொடிகாமம் எரிபொருள் நிலையத்தில் இராணுவத்தால் ரோக்கன் நடைமுறை

சாவகச்சேரி, ஜூன் 28

கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகத்துக்கு ரோக்கன் நடைமுறை இராணுவத்தால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது, 'எங்களது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் சீரான முறையில் எந்தவிதமான குறைகளுமின்றி உரிய வரிசைப்படி எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் எமது தலைமையகத்துக்கோ முகாமையாளருக்கோ எந்தவிதமான அறிவித்தல்களும் வழங்காமல், பெற்றோல் வழங்கப்படும் எனக் கூறி எரிபொருளுக்கான ரோக்கன் பதிவுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்' எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-14-159)

# மண்ணெண்ணெய் விநியோகத்தில் இராணுவத்தின் பதிவால் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்துக்கு இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டமையால் சிறிது நேரம் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக்காலை முதல் மண்ணெண்ணெய் விநியோகத்துக்கு இராணுவத்தினர் பதிவுகளை முன்னெடுத்தனர்.

விவசாயிகளுக்கு விநியோகிக்க மட்டுமே மண்ணெண்ணெய் உள்ளது. ஏனையோருக்கு வழங்க முடியாது என எரிபொருள் நிலைய ஊழியர்கள் இராணுவத்தினருக்குத் தெரிவித்தனர். எனினும் அதைப் பொருட்படுத்தாது இராணுவத்தினர் பதிவுகளை முன்னெடுத்ததால் பதிவுகளை மேற்கொள்ள விவசாயிகளைத் தவிர்ந்த பல மக்கள் முண்டியடித்தனர். இதனால் அங்கு சற்றுநேரம் குழப்பநிலை தோன்றியது.

அதனையடுத்து இது தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலருக்கும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருக்கும் தகவல் வழங்கப்பட்டது. பிரதேச செயலர் மற்றும் முகாமையாளரால் மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என்றும் ஏனையோருக்கு விநியோகிக்க முடியாது என்றும் இராணுவத்தினருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னரே இராணுவத்தினர் பதிவு நடவடிக்கைகளை இடைநிறுத்தினர். (ம-26)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சீருடை தரிக்கும் எரிபொருள் விநியோகம்

**கோ**த்தாபய ராஜபக்சவை 2019 ஆம் ஆண்டு பதவிக்குக் கொண்டு வருவதற்காக தலையால் கிடங்கு கிண்டிய முருத்தெட்டுவ ஆனந்த தேரர் சில நாள்களுக்கு முன்னர், 'கோத்தாபய ராஜபக்சவுக்கு அரச நிர்வாகத்தை முன்கொண்டு செல்லத் தெரியாது என்ற விடயம் இப்போது உறுதியாகியுள்ளது' என்று கூறியிருக்கிறார். கோத்தாபய ராஜபக்சவும் முருத்தெட்டுவ ஆனந்த தேரரின் கூற்று உண்மை என்பதை தன்னுடைய குறளி வித்தைகள் மூலம் தொடர்ச்சியாக நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

நாடு எரிபொருள் இன்றித் திணறிக் கொண்டிருக்கும் நிலையில், அரசாங்கம் எரிபொருள் விநியோகத்துக்கான பொருத்தமான திட்டங்களையோ– பொறிமுறையையோ– இதுவரை நடைமுறைப் படுத்தவில்லை, ஏன் தயாரிக்கக்கூட இல்லை. எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான காரணத்தை மக்கள் தலையில் கட்டிவிட்டு வாளாவிருந்தது கோத்தாபய – ரணில் அரசாங்கம். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்ட எரிபொருளைப் பெறுவதற்காக இரவிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாய் விரித்துப் படுத்திருக்க வேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான எரிபொருள் வழங்கலை சீராக்குவதற்குத் தற்போது அதிகாரிகள் ஒரு திட்டத்தை ஆராய்ந்து நடைமுறைப் படுத்த முனைந்திருக்கின்றனர். கிராம அலுவலர் ஊடாக எரிபொருள் விநியோக அட்டைகளை வழங்கி , பிரதேச செயலரின் அனுமதியோடு எரிபொருள்நிரப்பு நிலையங்களில் உருப்பெறும் வரிசைகளைக் குறைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதிகாரிகளின் இந்த முயற்சிக்கும் கோத்தாபய அரசாங்கம் சங்கு ஊதியிருக்கின்றது.

இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்த அரசாங்கம் இப்போது திடீரென இராணுவத்தினரை எரிபொருள் விநியோக நடவடிக்கைக்குள் புகுத்தியிருக்கிறது. எரிபொருள் விநியோகத்துக்கான 'ரோக்கன்கள்' இராணுவத்தினரால் மக்களுக்கு வழங்கப்படும் என்றும், அதன்பின்னர் எரிபொருள் வழங்கும் திகதியில் மக்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்த அறிவிப்பை கோத்தாபய அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இராணுவத்தினரிடம் ரோக்கன் பெறுவதற்கு ஒரு நாள் முழுவதும் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமையே இருக்கின்றது. அதன்பின்னர் இராணுவத்தினரால் அறிவிக்கப்படும் தினத்தில் எரிபொருளைப் பெறுவதற்குச் சென்று காத்திருக்கவேண்டும். ஆக, மக்கள் எந்த வேலைக்கும் செல்லாது எப்போது எரிபொருளுக்காக அழைப்பார்கள் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கவேண்டும். இந்த அறிவிப்பால் அரச அதிகாரிகள் மேற்கொண்டிருந்த பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படுமா என்ற குழப்பமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டிலுள்ள எரிபொருள் நெருக்கடி இப்போதைக்குத் தீரப் போவதில்லை. உண்மையைச் சொல்வதானால் எரிபொருள் கையிருப்புக்கள் இப்போது இலங்கையில் இல்லை. எதிர்வரும் நாள்களில், வாரங்களில் எரிபொருளுக்கான போராட்டங்கள் தீவிரமடையவிருக்கின்றன. அந்த அச்சமே கோத்தாபய ராஜபக்ச இராணுவத்தினரை எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குக் காரணம் என்று அரச உயர் மட்டங்களில் இருந்து அறிய முடிகின்றது. இராணுவத்தினரை அதிகளவில் களமிறக்குவதன் ஊடாக மக்களை அச்சப்படுத்தி, போராட்டங்களைத் தணிக்க முடியும் என்று நம்புகின்றார் கோத்தாபய ராஜபக்ச.


பொதுமக்கள் சார்ந்த பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். அதுவும் இவ்வாறானதொரு அசாதாரண நிலைமையில் மக்களை இராணுவத்தினர் கையாள்வது முரண்பாடுகளை அதிகரிக்கும். இந்த நடவடிக்கையில் இராணுவத்தினரை ஈடுபடுத்திய முதல் தினத்திலேயே பல இடங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அச்சுவேலியில் விவசாயிகளுக்கென அரச அதிகாரிகள் ஒதுக்கி வைத்திருந்திருந்த மண்ணெண்ணெயை நேற்று எந்தவித முன்யோசனையும் இன்றி விநியோகிப்பதற்கு இராணுவத்தினர் எடுத்த முயற்சியும் இதற்கு உதாரணம். வரிசைகள், தட்டுப்பாடுகள், காத்திருப்புக்கள் என்று விரக்தியின் உச்சத்தில் மக்கள் இருக்கும் போது, இராணுவத்தினரின் அடக்குமுறைப் போக்கும், முன்யோசனையற்ற செயற்பாடுகளும் பெரும் கலகங்களையே உருவாக்கும். இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகளாலேயே அண்மையில் விசுவமடுவில் பொதுமக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருந்தது. தென்னிலங்கையிலும் இப்படியான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. எரிபொருள் விநியோகத்தைச் சீருடைமயப்படுத்தியதன் மூலம் இதுபோன்ற பதற்றமான , பாரதூரமான சம்பவங்கள் இனிமேல் அடிக்கடி ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

பொறுப்பற்ற தீர்மானங்களால் நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கும் கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் இன்னமும் தன் தவறுகளை உணர்ந்து கொண்டதாக இல்லை. இந்த நெருக்கடிகளைக் கையாளக்கூடிய திறமையும், அனுபவமும் கொண்ட ஜனாதிபதியோ, அமைச்சரவையோ நாட்டில் இல்லை என்பது பரகசியம். அதை உணர்ந்து நிபுணத்துவம் மிக்கவர்களின் ஆலோசனைகளையாவது அரசாங்கம் பெற்றுக்கொள்ள முயலவேண்டும். இல்லாவிட்டால் நாடு விரைவில் சுடுகாடாக மாறிவிடும்.

### நாளொரு நல்வார்த்தை

" வெற்றியை கொண்டாடுவது நல்லதுதான். ஆனால், தோல்வியின் பாடங்களை மறக்காமல் இருப்பது மிகவும் நல்லது"

-பில்கேட்ஸ்



# புதிய கொரோனாத் திரிபு: இலங்கை தீவிர அவதானம்

## மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவிப்பு



கொழும்பு, ஜீன் 28

**கொரோனா வைரஸின் புதிய திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது என்று சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, புதிய வைரஸ் திரிபு இலங்கையில் இது வரை கண்டறியப்பட வில்லை என்றும் அவர் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்

பிஏ 5 என்று பெயரிடப்பட்ட இந்த புதிய வைரஸ் திரிபு மிகுந்த அவதானத்துடன் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ள மருத்துவர் சந்திம ஜீவந்தர, இந்த புதிய வைரஸ் 63 நாடுகளில் பதிவாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் திரிபு முந்தைய கொரோனா வைரஸ் திரிபுகளை விட அதிகமாகப் பரவுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ-இ)

## கொள்கலன் கட்டணம்; 10 வீதத்தால் உயர்வு

கொழும்பு, ஜீன் 28

இன்று நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த கொள்கலன் போக்குவரத்து வாகனங்களின் உரிமையாளங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு முன்னர், வாகனங்களின் உதிரிப் பாகங்களின் விலை அதிகரிக்கப் பட்டதாலும் சிரமங்களை எதிர்கொண்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ய)

## கர்ப்பிணிப் பெண்களுக்கு விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்

கொழும்பு, ஜீன் 28

கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் விசேட அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளனர். நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், பிரசவ வலி உச்சமடையும் வரையில் வீடுகளில் காத்திருக்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் இன்மை காரணமாக மருத்துவமனை செல்ல முடியாது நிக்கரவட்டிய பிரதேசத்தில் பெண் ஒருவர் வீட்டிலேயே சிசுவைப் பிரசவிக்க நேர்ந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

பிரசவ வலி ஏற்படும் அறிகுறிகள் தென்படும்போதே மருத்துவமனைகளில் சேர்வதற்கு கர்ப்பிணிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (எ-இ)

நாளை

29.06.2022 புதன்கிழமை

ஆனி 15 நயினாதீவு நாகபூஷணியம்மை கொடி

சுபநேரம் : 04.26 - 05.56

ராகுகாலம்: 11.56 - 01.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு உக்ரைனின் கேந்திரமான

# செவரோடோனெட்ஸ்க் ரஷ்யக் கட்டுப்பாட்டில்!



**கீவ், ஜூன் 28**

**உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைளை ஆரம்பித்துள்ள ரஷ்யா, கிழக்கு உக்ரைனின் கேந்திரம் என்று சொல்லப்படும் செவரோடோனெட்ஸ்க் நகரத்தை முற்றுமுழுதுமாகக் கைப்பற்றியுள்ளது.**

உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை அறிவித்தது ரஷ்யா. ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்து உக்ரைனைப் பாதுகாப்பதற்காக உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இராணுவ உதவிகளை அள்ளிக் குவித்து வருகின்றன. இந்த உதவிகளால் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு வேகம் மந்தமாகியது. இந்தப் பின்னணியில் கிழக்கு உக்ரைனின் கேந்திரம் என்று சொல்லப்படும் செவரோடோனெட்ஸ்க் நகரத்தை ரஷ்யா முற்று முழுதுமாகக் கைப்பற்றியுள்ளது.

இதை, அந்த நகரத்தின் ஆளுநர் உறுதிப்படுத்தியுள்ளார். 'கிழக்கு உக்ரைனின் கேந்திரத்தை ரஷ்யர்கள் முழுவதுமாகக் கைப்பற்றியுள்ளனர்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)



## பெலாரஸ் எல்லையிலிருந்து உக்ரைன் மீது தாக்குதல்!

மின்ஸ்க், ஜூன் 28

உக்ரைன் மீது பெலாரஸ் எல்லையில் இருந்து ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சுமார் 20 ஏவுகணைகளால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களால் அந்தப் பகுதியில் உள்ள உக்ரைனின் இராணுவக் கட்டுமாணங்கள் அழிந்துள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. உக்ரைனும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. (ம)

## ஜி - 7 மாநாட்டில் ரஷ்ய எதிர்ப்பு!



பெர்லின், ஜூன் 28

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஜி-7 மாநாடு ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில், இன்றைய மூன்றாம் நாள் அமர்வில் ரஷ்யாவுக்கு எதிரான சில முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

ரஷ்யாவின் முக்கிய வருவாய்களை தடைசெய்யும் வகையில் சில கலந்துரையாடல்கள் இன்றைய அமர்வில் முன்னெடுக்கப்படவுள்ளன. ரஷ்யாவில் தங்கியிருக்காமல் இதர வழிகளில் எரிபொருள் பொறிமுறையை உருவாக்குவது, ரஷ்யத் தங்கத்துக்குத் தடை விதிப்பது என்பன இன்றைய அமர்வில் கலந்துரையாடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளான, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, இத்தாலி, பிரிட்டன், ஜப்பான் ஆகியன ஜி-7 கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. (ம)

### பத்திரிகையாளர் ஜமாலின் கொலைக்குப் பின்

## சவூதியின் இளவரசர் துருக்கிக்குப் பயணம்

*சர்வதேச அரங்கில் பரபரப்பு*



அங்கரா, ஜூன் 28

பத்திரிகையாளர் ஜமாலின் கொலைக்குப் பின்னர், சவூதியின் பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான் முதன்முறையாக துருக்கிக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

சவூதி அரேபியா அரசையும் அந்த நாட்டு மன்னர் மற்றும் இளவரசர்களையும் கடுமையாக விமர்சித்து கட்டுரைகளை எழுதி வந்தவர் புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஜமால் கஷோகி. இவர் கடந்த 2018 ஆம் ஆண்டு துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.

உலகம் முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தப் படுகொலையின் பின்னணியில் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான் இருப்பதாக துருக்கி குற்றம் சாட்டியது. அவரை கைது செய்து சட்டத்தின் முன்பு நிறுத்தவேண்டும் எனவும் துருக்கி வலியுறுத்தியது. ஆனால் சவூதி அரேபிய அரசு இதனை திட்டவட்டமாக மறுத்தது.

சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் பின் சல்மானின் உத்தரவின் பேரிலேயே ஜமால் கஷோகி படுகொலை செய்யப்பட்டதாக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் கூறி வந்தன. இந்த சம்பவத்துக்கு பின்பு சவூதி அரேபியா மற்றும் துருக்கி நாடுகளிடையேயான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது.

இந்தநிலையில் சவூதி அரேபிய இளவரசர் மொகமட் பின் சல்மான் கைது செய்யப்பட வேண்டும் என வலியுறுத்திய துருக்கி நாட்டுக்கு, அவரே அண்மையில் அரசு முறை பயணம் மேற்கொண்டார். துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அதிபர் மாளிகையில் இளவரசர் சல்மானை எர்டோகன் வரவேற்றார். அப்போது இருவரும் கைகுலுக்கி ஆரத் தழுவிக் கொண்டனர்.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள துருக்கி, அதிலிருந்து மீண்டுவருவதற்கு சவூதி பெருமளவு உதவிகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரஷ்யாவில் முதலீடு செய்யுமாறு இந்தியாவுக்கு புடின் அழைப்பு

மொஸ்கோ, ஜூன் 28

ரஷ்யாவிடம் இருந்து 30 சதவீத தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் மற்றும் நிலக்கரியை இந்தியா வாங்கி வரும் நிலையில் இந்திய வணிக வளாகங்களை ரஷ்யாவில் ஆரம்பிக்குமாறு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதால் உக்ரைன் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெயை வாங்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுத்துள்ளதால் ரஷ்யா மலிவு விலையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு கச்சா எண்ணெயை விற்பனை செய்கிறது.

மே மாதத்தில் ரஷ்யாவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ள கச்சா எண்ணெய் சாதனை அளவை எட்டியுள்ளது. கச்சா எண்ணெயை தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து நிலக்கரியையும் இந்தியா 30 சதவீத தள்ளுபடி விலையில் வாங்கி வருகிறது. இந்த வர்த்தகத்தைத் தொடர்ந்து இந்திய வணிக வளாகங்களை ரஷ்யாவில் ஆரம்பிக்குமாறு புடின் அழைப்பு விடுத்துள்ளார். (ம)




அமெரிக்காவில் கருக்கலைப்பு செய்வதற்கு, அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தடை விதித்தமைக்குப் பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பல்லாயிரம் மக்கள் வீதிகளுக்கு இறங்கி கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கவேண்டும் என்று போராட்டங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். பைடனின் அரசாங்கமும் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும். புதிய நட்புகளால் ஆதாயம் அடைவீர்கள். தடைப்பட்டிருந்த செயல்கள் நிறைவேறும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் பல்வேறு சிந்தனைகள் உருவாகும். சிந்தித்து செயற்பட வேண்டும். செயல்களில் கவனம் தேவை. மற்றவரை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு.

**மிதுனம்:** அலைச்சல் கூடும். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். ஆடம்பர செலவுகள் செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வராமல் போகும்.

**கடகம்:** உங்களின் செல்வாக்கு உயரும். முயற்சியில் இருந்த தடைகள் விலகும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வரவு முன்பைவிட அதிகரிக்கும். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய ஒப்பந்தம் கையெழுத்தா கும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பணியிடத்தில் உங்களின் ஆலோசனைக்கு மதிப்புண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**கன்னி:** பழைய அனுபவங்களைக் கொண்டு முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும்.

**துலாம்:** பிறருடன் அனுசரித்து செல்வதால் சில நன்மைகளை அடையலாம். பணியிடத்தில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். யோகமான நாள். வாழ்க்கைத்துணையுடன் இருந்த முரண்பாடு நீங்கும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும்.

**தனுசு:** வருவாய் அதிகரிக்கும். மற்றவர்களால் முடியாத ஒரு செயலை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**மகரம்:** உங்களின் திறமை வெளிப்படும் நாள். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். உங்களின் நிதிநிலை உயரும். தொழிலை விரிவு செய்வீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட செயலில் கவனம் செலுத்துவீர்கள். மகிழ்ச்சியான நாள். மறைமுக எதிர்ப்புகளைக் கண்டறிந்து, எச்சரிக்கையுடன் செயற்பட்டு எண்ணியதை முடிப்பீர்கள். உழைப்பில் கவனம் செல்லும்.

**மீனம்:** தைரியத்துடன் செயற்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள். அரசு வழியில் ஆதாயம் காண்பீர். பொறுப்புகள் கூடும். உங்களின் திறன் வெளிப்படும். அதிகாரிகளின் ஆதரவு உண்டாகும்.

# இடைக்கால அரசாங்கமே நெருக்கடிகளுக்குத் தீர்வு

## இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு இவ்வாறு வலியுறுத்து

**வவுனியா, ஜூன் 28**

**இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கி பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கும் வரை நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம். இடைக்கால அரசாங்கமொன்றே இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு என அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய ஏற்பாட்டாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.**

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தொழில்சார் சமூகங்கள் பாதிக்கப்பட்டு பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளன. இன்றைய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுவதற்கான காரணம் ராஜபக்சக்கள் தமது உறவினர்களை பாதுகாப்பதற்காக வழங்கிய வரிச்சலுகையேயாகும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றால் இந்த பிரச்சினைகளுக்கு ஒரு வகையில் தீர்வு வரும் என்று பலர் நம்பியபோதும் அவரும் ஏழைகள் மீதே வரியைச் சுமத்தியுள்ளார்.

இதனால் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவது தொழிலாளர் சமூகமே. விவசாயிகள், மீனவர்கள், தோட்டத்தொழிலாளர்கள், ஆடைத்தொழிற்சாலைத் தொழிலாளர்கள், உணவகங்கள் மற்றும் விருந்தினர் விடுதிகளில் தொழில் புரிந்த இளைஞர்கள் அனைவரும் தொழில்களை இழந்து மிகவும் விரக்தியடைந்துள்ளனர்.

எனவே அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு என்ற வகையிலே ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். நாட்டில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் விருப்பத்துக்கு அமைய ஜனாதிபதி கோத்தாபய உள்ளிட்ட அத்தனைபேரும் உடனடியாகப் பதவி விலகி இடைக்கால அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். நாளுக்கு நாள் நாடு அபாயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றமையால் ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் இணைந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

எமது கோரிக்கையின் அடிப்படையில் உடனடியாக இடைக்கால அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த அரசாங்கம் இடைக்கால செயற்றிட்டம் ஒன்றை மேற்கொண்டு மேற்கூறப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அதுவரை நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம் - என்றார். (ம-14,110)

# சாவகச்சேரி நகர சபையில் சேதனப்பசளை விற்பனை!


சாவகச்சேரி ஜூன் 28

சாவகச்சேரி நகரசபையால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளை நாளைமறுதினம் காலை 9 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிசறு திட்டத்தின் கீழ் கண்ணாடிப்பிட்டிப் பகுதியில் சேகரித்த உக்கக்கூடிய கழிவுகளை பதப்படுத்தி தயாரிக்கப்பட்ட சேதனைப் பசளையே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ம-9)



'ஒன்றாகப் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் விவசாய உற்பத்தி கருத்தரங்கொன்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. (ம)



# கிண்ணியாவில் நேற்று இலவச பஸ் சேவை!

திருகோணமலை, ஜூன் 28

எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, திருகோணமலை - கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தூர பாடசாலைகளுக்கிடையில் நேற்று இலவச பேருந்துச் சேவை மேற்கொள்ளப்பட்டது.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசுகான் தலைமையின் கீழ் ஆரம்பித்த நிகழ்வில், அல் ஹிக்மத்துள் உம்மா பவுண்டேஷன் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான கஸ்ஸாலி பாத்திஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில், சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ.கந்த.சத்தியதாசன் 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சன்னிதி' என்ற விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம)



அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு, வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் ஒருபகுதியாக பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. வித்தியாலய அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்துகொண்டார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















# அண்ணா வி.கழக கால்பந்தில் விக்னேஸ்வரா சம்பியனானது

## காளிகாம்பாள் விளையாட்டுக் கழகம் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்துக்கும் துணைவி சென். நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளாலும் கோல் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. இதையடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் 4:3 என்ற அடிப்படையில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணிக்கு கிண்ணத்தைக் [illegible] ளித்தார். வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் குணதிலக, வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் தாவடி காளிகாம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் காளிகாம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ம-125)

## ஆசிரியருக்கான கடிதம்

# நல்லாசிரியர்களாக சிந்திப்போமா?

கிராமப்புற பாடசாலைகளில் பணிசெய்யும் ஆசிரியர்களை கடமைக்கு செல்ல வேண்டாமென கோரிக்கை விடுபவர்கள் இன்னொரு விடயத்தையும் கூற வேண்டும். அதாவது தனியார் கல்வி நிலையங்களுக்கும் செல்ல வேண்டாமெனவும் கோரவேண்டும்.

ஆனால் அப்படி சொல்ல மாட்டார்கள். காரணம் இவ்வாறு கோரிக்கை விடுபவர்கள் பெரிய தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்களாகவும் இருக்கக் கூடும். அதாவது கொழுத்த இலாபம் சம்பாதிக்கும் முதலாளிகள்!

தமது நலன்களே இவர்களது நோக்கம். அதற்காக சந்ததி நாசமானாலும் கவலைப்படமாட்டார்கள்.

உண்மையிலே, கிராமப்புற பாடசாலைகளில் பயிலும் மாணவர்களில் கணிசமானவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குப் பணம் கொடுக்கும் வசதி அற்றவர்கள். பாடசாலையை நம்பியே வருகிறார்கள். இந்த மாணவர்களின் எதிர்காலத்தை சிந்தித்து, தொலை தூரங்களில் இருந்து மிதிவண்டியில் வந்து அர்ப்பணிப்புடன் கற்பிக்கும் பெண் ஆசிரியர்களும் (நல்லாசிரியர்களும்) இருக்கிறார்கள். இதேவேளையில் இத்தகைய பொறுப்பற்றவர்களின் கோரிக்கைகளைப் பயன்படுத்தி தொடர் விடுப்புகளை எடுக்கும் ஆசிரியப் போலிகளும் உள்ளனர்.


உண்மையில் பிரச்சினை உள்ள ஆசிரியர்கள் வலயப் பணிப்பாளரின் அனுமதிபெற்று அயல் பாடசாலைகளில் பணிசெய்ய முடியுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இந்த வழியை பயன்படுத்தலாமே!

கறுப்புச் சந்தைப் பெற்றோல் வியாபாரத்தை ஒழித்தாலே போதும். பிரச்சினை தீரும். இனத்துக்காக உயிரையே தியாகம் செய்த மண்ணில் சுயநலம் மட்டுமே தலைவிரித்தாடுவது நல்லதா?

**மேகதூதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபரும் தலைமைத்துவமும்!



● நடேசு தயாளன்

பாடசாலைத் தலைமைத்துவம் என்பதோர் செயன்முறையாகும். திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான திறன்களை வெளிப்படுத்துவதோடு ஆசிரியர்களை, மாணவர்களைப் பாடசாலைச் சமூகத்தினரை உற்சாகமூட்டுதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட நீண்ட செயன்முறை இதுவாகும். இவற்றினூடாகப் பாடசாலைச் சமூகம், ஆசிரியர்கள், பெற்றோர் என அனைவரும் இணைந்து கல்வியின் பொது இலக்குகளை அடைந்துகொள்வதற்கான செயன்முறையாக இது விளங்குகின்றது. பாடசாலையொன்றின் தலைவரானவர் தான் நகர்ந்து செல்ல வேண்டிய பாதை தெரிந்தவராக, அப்பாதை வழியே ஏனையவர்களையும் இணைத்துப் பயணிப்பவராக, ஏனையோருக்கு வழிகாட்டுபவராக, வெற்றிக்கும் தோல்விக்குமிடையேயான தெளிவான வேறுபாட்டைத் தெரிந்தவராக விளங்குதல் அவசியமானதாகும்.

பாடசாலைக்கான தலைமைத்துவமானது சர்வதேச ரீதியாக முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒன்றாகவுள்ளது. பாடசாலையினது வெளியீட்டில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணுவதாகவுள்ள இந்தச் செயன்முறையானது பாடசாலைக்கு அதிகளவு சுயாட்சியை வழங்க முனையும் இவ்வேளையில், சிறந்த செயலாற்றமுடையதாக விளங்கவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. இத்தகைய பாடசாலைத் தலைமைத்துவமானது வெற்றிபெற்ற தலைமைத்துவமாக விளங்க வேண்டுமானால், நோக்கக் கூற்றினை தெளிவாக வடிவமைத்தல், கற்றல், கற்பித்தலினை வலுவூட்டல், பாடசாலையின் நிலையை மீள்வடிவமைத்தல், வகிபாகத்துக்கேற்ப பொறுப்புக் கூறலுக்கு தயாராதல், கலைத்திட்ட நடைமுறையை வலுவுடையதாக்கல், ஆசிரியர்களது செயன்முறையில் தர மேம்பாட்டை ஏற்படுதல், பாடசாலையின் உள்ளக, வெளியகச் சமூகத்தினரிடையே உறவினை வலுவடையச் செய்தல், நிறுவனத்தினரும் கல்விச் செயன்முறையினதும் இலக்குகளை அடைவதற்கு வசதிகளை ஏற்படுத்தல், வெளியீட்டுக்கான வளங்களைத் தொடர்புபடுத்தல், பாடசாலையை மகிழ்ச்சிகரமான இடமாக மாற்றியமைத்தல், ஆக்க மலர்ச்சிச் சிந்தனையுடன் செயற்படலும் ஏனையவர்களை வலுவூட்டலும் வகைகூறலுக்குட்பட்ட விடயங்களை எதிர்கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல், பாடசாலையைச் சுமுகமாகச் செயற்பட வைத்தல், வினைத்திறனான முகாமைத்துவ உத்திகளைக் கையாளல் என்பன அவசியமான தேவையாகவுள்ளது.

விளைதிறனான தலைமைத்துவ இயல்பு கொண்ட பாடசாலைத் தலைவரானவர் பாடசாலையின் நடத்தை இயல்புகளை அதனது அமைவிட நிலைமைகளை உணர்ந்தவராகவும் விளங்குவார். சமூக நிலைமைகள், ஆளிடைத் திறன்கள் என்பவற்றினதும் செயலாற்றம் தொடர்பிலும் அறிவுடையவராக விளங்குவார். நிறுவனக் கட்டமைப்பு வரலாறு, அரசியல் நிலைமைகள் தொடர்பிலான தெளிவும் அவரிடம் காணப்படும். பாடசாலைச் செயன்முறை தொடர்பிலான நுண்பாக அறிவு நிரம்பப் பெற்றவராகவும் காணப்படுவார்.

பாடசாலைத் தலைமைத்துவத்தில் பாடசாலையின் வகை முதன்னிலை முகாமையாளரது கல்வித் தகைமை, வயது, சேவை, அனுபவம், பாடசாலை அமைவிடம், தனியாள் இயலுமை, நிர்வாகத் தலைமைத்துவ இயல்பு என்பன நோக்கப்பட வேண்டியுள்ளது.

## மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள்வேண்டும்!

பாடசாலையொன்றைப் பொறுத்தவரையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையே பாடசாலையின் முக்கிய இலக்காகவுள்ளது. எனவே பாடசாலைத் தலைமைத்துவமும் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதாக விளங்கவேண்டும். மேலும் பாடசாலைகளானவை கலைத்திட்டத்தின் இலக்குகளை அடையத் தவறும் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு வழிநடத்த வேண்டிய தேவையுள்ளதால் இத்தகைய திட்டங்களைத் தயாரிக்கக்கூடிய இயலுமையுடையவராகப் பாடசாலைத் தலைவர் விளங்குதல் அவசியமானதாகும்.

பாடசாலைக்கான தலைமைத்துவமானது இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், திட்டமிடல், நேரசூசிகை தயாரித்தல், ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்தல் ஆசிரியர் கூட்டத்தை நடத்துதல், முரண்பாடுகளை முகாமை செய்தல், ஆரோக்கியமான பாடசாலைச் சமூகத்தினைத் தோற்றுவித்தல், ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் ஒழுங்குபடுத்துதல், பாடசாலை ஆவணங்களைப் பேணுதல், மாணவர் அடைவுகளை மதிப்பீடு செய்தல், நிதியீட்டங்களுக்கான வழிமுறைகளைத் தேடியறிதல், சமூக நோக்குடன் செயற்படுதல் என்பவற்றை உள்ளடக்கிய திறன் கொண்டதாகக் காணப்படவேண்டும்.

பாடசாலைத் தலைமைத்துவமானது திட்டமிடல் செயற்முறை தொடர்பில் கூடிய கவனத்துடன் செயலாற்றுவதாகவும் விளங்கவேண்டியுள்ளது. இதன் மூலமே தன்னால் வழி நடத்தப்படும் பாடசாலையின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என்பதோடு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடியுமாயிருத்தல், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம் என்போரினை ஊக்குவிக்கவும் ஆக்க மலர்ச்சிச் சிந்தனைக்கும் வழிசமைப்பதாகவும் இருக்கும்.

## வள இருப்பைப் பயன்படுத்தி உச்ச இலக்கை அடைதல்!

வெற்றிகரமான பாடசாலைத் தலைமைத்துவமானது வளக்கணக்கெடுப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதாக இருக்கும். இதன் மூலமே தன்னிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி உச்சப் பயன் கொண்ட இலக்கு நோக்கிய நகர்வை மேற்கொள்ளமுடியும். பாடசாலையின் முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் குறுங்கால, நீண்டகால நோக்கில் திட்டமிடுவதற்கு இது உதவியாக இருக்கும்.

பாடசாலைத் தலைமைத்துவமானது ஆசிரியர் கூட்டங்களைத் திட்டமிட்ட வகையில் நடத்துவதனூடாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், தீர்மானங்களை மேற்கொள்ளுதல், தொடர் செயற்பாட்டுக்கான ஊக்கல்களை வழங்குதல், குழு உணர்வை வளர்த்தெடுத்தலும் கூட்டுணர்வைக் கட்டியெழுப்பலும், ஆசிரியர், மாணவர்கள் செயலாற்றங்களை மீளாய்வு செய்தலும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணவும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இதற்காகத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நடத்துதலும் இலக்குகள் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படிமுறையொழுங்கில் கட்டியெழுப்பலும் தீர்மானங்கள் ஜனநாயகப் பாங்கில் மேற்கொள்ளலும் இன்று முக்கியத்துவமுடையதாகவுள்ளது.

வெற்றியடைந்த தலைமைத்துவமானது தனது சொந்த வளர்ச்சிக்கும் கற்போனதும் கற்பிப்போனதும் வளர்ச்சிக்கும் வகை கூறுவதாக விளங்குவது காலத்தின் தேவையாகும். பாடசாலை அதிபரானவர் ஆசிரியர்களது வளர்ச்சியைத் தூண்டுபவராகவும் தனது சொந்த வளர்ச்சிக்காகத் தொடர்ந்து கற்பவராகவும் விளங்குவார். ஆரோக்கியமான கற்றல், கற்பித்தல் செயன்முறையின் வெற்றியானது பாடசாலைத் தலைமைத்துவத்தின் வாழ்க்கை நீடித்த கல்வியின் செயற்முறையில் தங்கியுள்ளதும் நோக்கப்பட வேண்டும்.

இன்றைய பாடசாலைத் தலைமைத்துவமானது அனைத்து மாணவர்களது வளர்ச்சி தொடர்பிலான சாதகமான நிலைகள், பாதகமான நிலைகள் தொடர்பில் கருத்தில் கொள்பவராகவும் சவால்களை வெற்றி கொள்பவராகவும் பாடசாலை முழுவதற்கும் பரந்தளவிலான தரவுகள் தகவல்களை வழங்கக் கூடிய தரவுத் தளத்தினை தன்னகத்தே கொண்டகதாகவும் விளங்குதல் அவசியமானது. ஆசிரியர்களிடத்தில் தலைமைத்துவத்தை உருவாக்கல், அறிவுறுத்தல், தந்திரோபாயம், மதிப்பீட்டு அளவீடுகள் தொடர்பான ஆளணி அபிவிருத்தி தொடர்பான தெளிவு உடையவராகவும் விளங்குதல்வேண்டும். ஒழுக்கவியல் ரீதியான தீர்மானம் மேற்கொள்ளும் திறன் தனது குழுவினரிடையே பல்திறன் ஆற்றல்களை வளர்த்தெடுத்தல், தொழில் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல், அழுத்த நிலைமைகளில் இருந்து பாடசாலைச் சமூகத்தினரை மீட்டெடுத்தல் என்பன தொடர்பில் தெளிவுடையவராக இருத்தல், ஒவ்வொரு பிள்ளைகளினதும் ஆசிரியரதும் திறனுக்கேற்ப அவர்களை முன்னேற்றமடையச் செய்தல் என்பன தொடர்பில் தெளிவுடையவராக இருத்தல் என்பவற்றுக்கப்பால், தொடர்பாடல் திறன் கூட்டிணையும் திறன் விஞ்ஞானப் பாங்கான சிந்தனைத் திறன் பிரச்சினை தீர்க்கும் உத்திகள் ஊடாக சேர்ந்தியங்கும் இயல்பை வளர்த்தல், சாதனங்கள் தொடர்பான பொது அறிவு உலகு பற்றிய தெளிவு உடையவராக விளங்குதலும் அவசியமானதாகும். பிள்ளையின் அனைத்து விதமான உயர் அடைவுகளையும் பெற்றுக் கொடுத்தலுக்கு அதிபரும் ஆசிரியரும் வகை கூற வேண்டியவர்கள் என்பதோடு அனைவரும் தொழிலுக்குத் தயாரானவர்கள் என்பதனை உணர்த்துபவராகவும் பாடசாலைத் தலைமைத்துவம் விளங்குதல் வேண்டும்.

சிறந்த பாடசாலைத் தலைவரானவர் எதிர்கால நோக்கை அறிந்தவராகவும் தனது சிந்தனையை நடப்பு உலகத்துக்குப் பொருத்தமானதாக மாற்றியமைக்கும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். தலைவரானவர் தனது தீர்மானங்கள் அதன் தரம் தொடர்பில் நம்பிக்கையுடையவராக விளங்குதல் என்பதற்கப்பால் தனது கட்டளைகளை ஏனையவர்கள் பின்பற்றச் செய்பவராகவும் விளங்குதல்வேண்டும்.

பாடசாலைகள் சமூகத்துடன் கூட்டு இணையும் போது சிறப்பான செயலாற்றத்தினை பாடசாலைகளுக்காகப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே பாடசாலைக்கான சமூக அணிதிரட்டலினை மேற்கொள்ளக் கூடிய திறன் பாடசாலை அதிபரிடம் காணப்படவேண்டும். பாடசாலையானது வாழ்க்கை நீடித்த கல்வி, புதிய சவால்கள், உலக மாற்றங்கள், வேலை உலகின் எதிர்பார்க்கைகள், தொழிற்படைக்கு அவசியமான மென்திறன்கள், உலக சமூக அங்கத்தினர் என்ற அடிப்படையில் பொருந்தி வாழக் கூடிய சமூக அங்கத்தவர் உருவாக்கம் என்பவற்றைக் கற்போனிடம் பாடசாலைகள் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளதால் அதற்கான ஆற்றமிக்கவராகப் பாடசாலைத் தலைவர் விளங்குகின்ற போது அவரது வாண்மைத்துவமும் உயர்வானதாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளுக்கு கடும் நெருக்கடி அறுவைச் சிகிச்சைகள் பாதிப்பு

கொழும்பு,ஜூன் 28

**நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக எரிபொருளை பெற்றுக்கொள்ள சுகாதாரத்துறையினர் வரிசைகளில் காத்திருப்பதால் மருத்துவமனைகளில் அறுவைச்சிகிச்சைகளைக்கூட மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் உபதலைவர் விசேட மருத்துவர் சித்ரான் ஹதுருசிங்க தெரிவித்ததாவது:-

எரிபொருள் பற்றாக்குறையால் சுகாதாரத்துறை கடும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளதுடன், நாட்டில் சுகாதார அவசர நிலைமை நிலவுகின்றது. மருத்துவர்களால் அறுவைச் சிகிச்சைகளைக்கூட மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், இருதய அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவர்கள் தமது சேவைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. மகப்பேற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர்களும் சிகிச்சைகளை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக எளிமையாக மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகள் கூட, தற்போதைய சூழ்நிலையால் இன்று சிக்கலானவையாக மாற்றமடைந்துள்ளன. இதற்கான பொறுப்பினை அரசாங்கமே ஏற்கவேண்டும் - என்றார். (ய)

## மருந்துகளுக்குத் தட்டுப்பாடு: மூடப்படும் மருத்துவமனைகள்

கொழும்பு, ஜூன் 28

சுகாதாரத்துறையில் நிலவும் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கிராமிய மருத்துவமனைகள் மூடப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

அநுராதபுரத்தின் கலாவெவ கிராமிய மருத்துவமனை, கல்நேவ மருத்துவமனை, நேகம மருத்துவமனை என்பன மூடப்பட்டுள்ளன. இலங்கையின் மிகவும் கஷ்டப்பிரதேசமான மொனராகலையின் சியம்பலாண்டுவை மருத்துவமனையும் தற்போது மருந்து பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இன்னும் பல்வேறு மருத்துவமனைகள் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக மூடப்படும் அபாயம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

*மாத்தறை மருத்துவமனைக்கு எதிராக*

## பிரதேச செயலக ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 28

மாத்தறைப் பொது மருத்துவமனைக்கு எதிராக மாத்தறைப் பிரதேச செயலக ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மருத்துவமனைக்குச் சென்ற மாத்தறைப் பிரதேச செயலர் கௌசல்யகுமாரிக்கு சிகிச்சை வழங்காது, அவரைத் தடுத்து வைத்திருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மாத்தறை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பேரணியாக சென்ற ஊழியர்கள், இதற்குரிய தீர்வை வழங்குமாறு மாத்தறை மாவட்டச் செயலரிடம் முறைப்பாடொன்றையும் கையளித்தனர். (ம-14.இ)

## எரிபொருள் முற்பதிவால் விநியோகம் முடங்கலாம்

கொழும்பு, ஜூன் 28

எரிபொருளுக்கு வரையறுக்கப்பட்ட முற்பதிவால் எரிபொருள் விநியோகம் வழமை போன்று இடம்பெறுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை என பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் கையிருப்பு காரணமாக எரிபொருள் தாங்கி ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் வரிசையில் நிற்பதில் அர்த்தமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,இ)



*எரிபொருள் வரிசையில்*

## பஸ் மோதியதில் ஐவர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 28

மட்டக்களப்பு ஊறணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்தவர்கள் மீது பஸ் மோதியதில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

எரிபொருள் நிலையத்தில் எரிபொருளுக்காக நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து கொழும்பு-மட்டக்களப்பு பிரதான வீதியில் மக்கள் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை செங்கலடி பிரதேசத்தில் இருந்து ஆரையம்பதியை நோக்கிப் பயணித்த தனியார் பஸ், எரிபொருளுக்காக காத்திருந்தவர்கள் மீது மோதியுள்ளது. விபத்தில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன் விபத்தில் 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,இ)

## தெய்வீக இசையரங்குக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில், நல்லூர் உற்சவ காலத்தையொட்டி 2022 ஆம் ஆண்டுக்கான “தெய்வீக இசையரங்கு” நிகழ்வுக்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை மன்றக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புலம்பெயர் நாட்டிலுள்ள கலைஞர்கள் மட்டும் விண்ணப்பத்தை தமிழில் பூர்த்தி செய்து ikm.jaf.lk@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவும் ஏனைய கலைஞர்கள் அறிவுறுத்தலுக்கமைய விண்ணப்பத்தை தமிழில் பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரி ஊடாகவும் அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

*எரிபொருள் தட்டுப்பாட்டால்*

## மேல் மாகாணத்துக்கு மட்டும் உணவுப்பொருள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 28

எரிபொருள் தட்டுப்பாட்டால் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மேல் மாகாணத்துக்கு மட்டும் விநியோகிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை துறைமுக கொள்கலன் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

உணவுப்பொருள்களைக் கொண்டு செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து துறைமுகத்தில் உள்ள கொள்கலன் இறக்கும் தொழிலாளர்கள் அடுத்த வாரம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக அகில இலங்கை துறைமுக கொள்கலன் போக்குவரத்துக் கழகத் தலைவர் சனத் மஞ்சுள சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் எதிர்வரும் சில நாள்களில் நாட்டில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-14.இ)

## எரிபொருள் விலை அதிகரிப்பால் மரக்கறி விநியோகமும் முடங்கும்



கொழும்பு, ஜூன் 28

எரிபொருள் விலை அதிகரித்ததையடுத்து நாடு முழுவதும் மரக்கறி விநியோகம் முற்றாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கமத்தொழில் வளர்ச்சி குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாது எடுக்கும் முடிவுகள் காரணமாக மரக்கறிகளை பயிரிடும் விவசாயிகள், விவசாய நடவடிக்கைகளில் இருந்து விலகிச் செல்வதை தடுக்க முடியாது போகும் என சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இருக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை மொத்தமாகக் கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை நேற்று 95 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது அத்துடன் விநியோகமும் 90 வீதம் குறைந்து காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020
- மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020

மேற்படி பரீட்சைகளினை 09.07.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 18.07.2022 (திங்கட் கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 07.07.2022 (வியாழக்கிழமை) தொடக்கம் 08.07.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
27.06.2022 (cr.36268) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **சுந்தரராஜன் ராதாகிருஸ்ணா**
(காப்புறுதி ஆலோசகர் ஆயுட்காப்பீட்டு கூட்டுத்தாபனம் சுன்னாகம் கிளை LIC)
அவர்கள் கடந்த (25.06.2022) சனிக்கிழமை இயற்கை எய்தியுள்ளார். அன்னாரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!*
(cs 19837) (2.6)

தோற்றம் 07.01.1984 மறைவு 25.06.2022

உரிமையாளரும், ஊழியர்களும்
**சிறிதேவி கருமாரி நகைமாடம்.**

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் கௌரீஸ்வரி

சங்கானையைப் பிறப்பிமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் யாழ். வண். வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்தம் பாரியார் கௌரீஸ்வரி 27.06.2022 இறைபதம் அடைந்தார்.

அன்னார் சங்கானை அமரர் நாகேஸ்வரசர்மா சுலோசனாம்பாள் அவர்களின் அன்பு மகளும் அமரர் கண்டி நாகேந்திரகுருக்கள் அமிர்தாம்பிகை அம்மா அவர்களின் அன்பு மருமகளும், அமரர் பாலசுப்பிரமணியக்குருக்களின் பாசமிகு மனைவியும் ஸ்கந்தரூபக்குருக்கள் (காரைநகர்), சாந்தஸ்வரூபி, ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் (கொழும்பு), அஜந்தரூபி, ஜெயந்தரூபி, அமரர் சாந்தஸ்வரரூபக்குருக்கள், பாலகணேசக்குருக்கள் (கந்தர்மடம்), பாலமயூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யசோதா, மங்களேஸ்வரக்குருக்கள் (அரியாலை), கிருஸ்ணவேணி, ஜெயபாலக்குருக்கள் (நல்லூர்), மாரீஸ்வரக்குருக்கள் (கன்னாதிட்டி), பாலேஸ்வரி, யுகராஜக்குருக்கள் (புத்தூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாலகௌரி, கஜலக்ஷி, சுந்தரேஸ்வரமணிகண்டசர்மா, சுப்ரசாந்தி, சாந்தஸ்வரூபசர்மா, சாந்தஸ்வரூபினி, ஸ்ரீநாகேந்திரசர்மா, பாலேஸ்வரி, சிவசங்கவி, பிரஹதீஸ்வரசர்மா, பிரதாபசர்மா, சபரிகீர்த்தனா, சபரிகீர்த்திகா, பாலசுப்பிரமணியசர்மா, சுபரீஸசர்மா, சதுஸ்டிகா, நிவாஸசர்மா, ஸ்ரீசிவசங்கரி, மயூரிகா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழப்பாணம் கந்தர்மடம் அவரது இல்லத்தில் நாளை (29.06.2022) புதன்கிழமை நடைபெற்று காலை 08.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

48, புக்கயிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

0776391055
0764660685
0766850056

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 11 - 1951



மறைவு 27 - 06 - 2022

### செல்வராணி சுந்தரலிங்கம்

( ஓய்வு பெற்ற பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி முகாமையாளர் )

யாழ். திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி சுந்தரலிங்கம் நேற்று (27.06.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (நுணாவில்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம்-கமலம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூரனேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கனகரட்ணம் அவர்களின் அன்பு மைத்துனியும், சிற்பரன், நளாயினி, அபிராமி ஆகியோரின் பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**021 222 1976** குடும்பத்தினர்.

"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ"

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (31.05.2022) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம்

அமரர்
### முத்துலிங்கம் நடராசா
(பத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணியளவில் **"கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும்"** வீட்டுக்கிருத்திய நிகழ்வானது (30.06.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து. அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு. வெளிநாட்டு உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு துண்டுப்பிரசுரம். மலர்வளையம். பதாகைகள் மூலம் துயர்பகிர்ந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.45 நாயன்மார் வீதி. நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 06 . 1952



மறைவு 26 . 06 . 2022

### இராஜரட்ணம் பராசக்தி

அராலியைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் பராசக்தி 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரன். அற்புதானந்த ஈஸ்வரர். காலகாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவமணி. காலஞ்சென்ற இலட்சுமிகாந்தன். இலகுநாதன். தெய்வசிகாமணி. புஸ்பராணி மகேஸ்வரநாதன். காலஞ்சென்ற புவனநாதன் ஆகியோரின் மைத்துனியும் சிவானந்தி. சிவசக்தி. சிவமலர். சிவகரன். சசிலேகா. யசோதா. தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதலிங்கம். கிருபாகரன். ஜெகநாதன்.அனித்தா. பாஸ்கரன். ஸ்ரீதரன். துஷாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் [illegible] இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ம் வட்டாரம், அல்லைப்பிட்டி,
யாழ்ப்பாணம்.

077 832 0790
076 241 7647

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் கடற்படைக்கு இன்று காணி அளவீடு

## எதிர்க்க மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 28
காரைநகர் தென்மேற்கு ஜே / 45 கிராம அலுவலர் பிரிவிலுள்ள எலாரா கடற்படைத்தளத்தின் விரிவாகத்துக்காக 40 ஏக்கர் காணி இன்று காலை 8.30 மணிக்கு அளவீடு செய்யப்படவுள்ளது. இதனை எதிர்த்துப் போராடுவதற்கு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-26)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளியாருக்கு வழங்க முடிவா?

## எரிசக்தி அமைச்சு நேற்று முற்றுகை

கொழும்பு, ஜுன் 28
சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த பணியாளர்கள் சிலரால், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலர் மாப்பா பத்திரண, சுமார் 45 நிமிடங்கள் வரை அமைச்சில் தடுத்து வைக்கப்பட்டார்.
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிலையங்களை, வெளியாருக்கு வழங்கவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர வெளியிட்ட கருத்துதொடர்பில் அறிந்து கொள்வதற்காக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய பணியாளர்கள் அமைச்சுக்கு நேற்றுச் சென்றிருந்தனர். அமைச்சர் அங்கு இல்லாததன் காரணமாக அந்தத் தரப்பினர் அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சின் செயலர் தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் அங்கிருந்து வெளியேறமுற்பட்டார்.
இதன்போது அவரை வெளியேறவிடாது, பணியாளர்கள் தடுத்தனர். பின்னர், பாதுகாப்புத் தரப்பினரின் தலையீட்டுடன் அவர் மீண்டும் அமைச்சுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் 45 நிமிடங்களின் பின்னர், அவர் அமைச்சிலிருந்து வெளியேறிய தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

பணவீக்கம்

# இலங்கையில் எவ்வித முன்னேற்றமுமில்லை!

கொழும்பு, ஜுன் 28
அதிக பணவீக்கம் பதிவாகும் நாடுகளின் பட்டியலில் இருந்து விடுபடும்வகையில் இலங்கை எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை. இதனால், இந்தப் பட்டியலில் சிம்பாப்வேக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது. (ம)

# ஐ.எம்.எப். உடனான பேச்சு அமெரிக்கா ஒத்துழைக்கும்

## இலங்கை வந்த குழு ரணிலிடம் உறுதியளிப்பு

கொழும்பு, ஜுன் 28
இலங்கை அரசுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜதந்திரக் குழு தெரிவித்துள்ளது.



இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்டர்லிங் தலைமையிலான குழுவினர் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இலங்கையில் நிதி முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க இந்தக் குழுவினர் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (ஒ-22)

## அந்நியச் செலாவணி ஈட்டும் நிறுவனங்களிடம்

# மின்சாரக் கட்டணத்தை டொலரில் அறவிட முடிவு

கொழும்பு, ஜுன் 28
தமது வருமானத்தில் 60 சதவீதத்துக்கும் அதிகமான பங்கு அந்நியச் செலாவணி ஈட்டும் தனியார் அல்லது அரச நிறுவனங்களிடம், எதிர்காலத்தில் மாதாந்த மின்சாரக் கட்டணத்தை டொலரில் செலுத்தும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக இந்த முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இலங்கை மின்சார சபைக்கு அந்நியச் செலாவணியில் ஏற்படும் எந்தவொரு செலவுகளையும் ஈடுசெய்ய இந்தக் கட்டணத்தைப் பயன்படுத்த முடியும்.
நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் திருத்தப் பணிகளுக்கு ஏற்கனவே 4 - 5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகியுள்ளது. அதற்கான கொடுப்பனவை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியேற்பட்டுள்ளது. இவ்வாறான ஏற்பாடுகளால் குறித்த செலவுகளில் இலங்கை மின்சார சபைக்கு ஓரளவு பங்களிப்பை வழங்க உதவும்.
இதேவேளை- இந்த வருடம் செப்ரெம்பர் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டுக்குத் தேவையான நிலக்கரி இருப்புக்களை இறக்குமதி செய்வதற்கு சுமார் 610 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது - என்றார். (ஒ-இ)

### எரிபொருள்...

பங்கீட்டு அட்டை முறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.
யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் முப்படையினரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது, அரசாங்கத்தால் நாடு முழுவதும் இராணுவத்தினரைப் பயன்படுத்தி 'ரோக்கன்' நடைமுறை முன்னெடுக்கப் பணிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் ஆராயப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து எரிபொருள் அட்டை விநியோகித்து அதன் அடிப்படையில் எரிபொருள் வழங்கலை ஒழுங்குபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை தொடர்பில் இராணுவத்தினருக்கு எடுத்துக்கூறப்பட்டது.
இதனையடுத்து யாழ். மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ள எரிபொருள் அட்டை முறைமைக்கு தாமும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தனர்.
நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட ரோக்கன்களையும், யாழ். மாவட்டச் செயலகத்தால் வழங்கப்படவுள்ள எரிபொருள் அட்டையையும் காண்பித்தே எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். அடுத்த தடவை, இராணுவத்தினரால் ரோக்கன் வழங்கப்படாது என்பதுடன், மாவட்டச் செயலகத்தின் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### வ.பி.போ.ச....

நடவடிக்கை நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது. ஆனாலும் பருத்தித்துறை சாலை மாத்திரம் இன்றைய தினமும் பணிப்புறக்கணிப்பை தொடரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
போக்குவரத்துச் சபையின் சாலைக்குச் செல்வதற்கு பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி பணிப்புறக்கணிப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. யாழ். மாவட்டச் செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு உறுதிமொழி வழங்கியிருந்தாலும் நேற்றைய தினம் திட்டமிட்டவாறு பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிலையில் நேற்றைய தினம் பெற்றோல் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வடக்கிலுள்ள 7 சாலைகளில், பருத்தித்துறை தவிர்ந்த ஏனைய சாலைகள் தமது பணிப்புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டுவந்துள்ளன. (அ-ஒ-26)


# வேலை வாய்ப்பு

**பதவி நிலை: சிட்டை எழுதுநர் (01) பெண்**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது விற்பனை நிலையம். காட்சியறை (Show Room) இல் பணியாற்றத் தகுதியுடைய மேற்படி பதவிநிலைக்கு (01) பெண் ஊழியர் தேவை.

**தகைமைகள்:**
1. க.பொ.த. சாதாரண தரத்தில் கணித பாடத்தில் (C) திறமைச் சித்தி உடன் சித்தியடைந்திருத்தல்
2. க.பொ.த. உயர்தரம் சித்தி
3. கணினி அறிவு விரும்பத்தக்கது

* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுடையோர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ / Whatsopp இலக்கத்திற்கோ தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்துடன் சுய விபரக்கோவையை 29.06.2022 இற்கு முன் அனுப்பவும்

gchenthu111@gmail.com
077 675 7178

(er.8592) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

அரசாங்கத்தின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த பின்னர், அவசர ஊடக சந்திப்பொன்று நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்று கருத்துக்களை முன்வைத்தனர்.

'இன்று (நேற்று) நள்ளிரவு முதல் ஜூலை 10 ஆம் திகதிவரை நாட்டில் அத்தியாவசிய சேவைகள் மட்டுமே முன்னெடுக்கப்படும். துறைமுகம், சுகாதாரம், உணவு விநியோகத்துக்கான போக்குவரத்து, விவசாய நடவடிக்கைக்கான தேவைப்பாடுகள், சுற்றுலாத்துறை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊடாக டீசல் மற்றும் பெற்றோல் விநியோகிக்கப்படும்' என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

அத்துடன், ஏனையோர் வீடுகளில் இருந்து பணிகளை முன்னெடுக்கலாம் எனவும், அத்தியாவசிய சேவைகள் முடங்காமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**கல்வி**

கொழும்பு வலயத்திலும் மேல் மாகாணத்தின் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மற்ற மாகாணங்களின் முக்கியமான நகரங்களில் அமைந்துள்ள பாடசாலைகளும் ஜூலை 10 வரை மூடப்படும். கிராமப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் அதன் அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளின் விருப்பப்படி செயற்படும்.

**போக்குவரத்து**

உள்ளகப் போக்குவரத்து இடம்பெற்றாலும், மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் எனவும் உள்ளகப் போக்குவரத்துக்கான எரிபொருள் இ.போ.ச. ஊடாக வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் அமைச்சர் பந்துல குறிப்பிட்டார்.

இருப்பினும் ரயில் போக்குவரத்து திட்டமிட்டவாறு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

'இது முடக்கம் அல்ல. 10 ஆம் திகதி வரை வீடுகளில் இருந்து பணிகளை முன்னெடுக்கலாம். கடைகள், மருந்தகங்கள், உணவகங்கள் திறந்திருக்கும். ஜூலை 10 ஆம் திகதிக்குப் பிறகு எரிபொருள் மற்றும் எரிவாயு கிடைக்கும். நாடு வழமைபோல இயங்கும். இந்தக் காலகட்டத்தில் மக்களின் ஆதரவு தேவை' என்று அமைச்சர் ஹரின் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## ரஷ்யாவிடமிருந்து...

ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில், இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெடேரியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 65 ஆவது ஆண்டு நிறைவு இந்த வருடம் கொண்டாடப்படுகிறது. ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான சமூக உறவுகளையும் நட்பையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கையில் ரஷ்யாவின் ஆதரவுக்காகவும், தேவையான சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் ரஷ்யாவின் உதவிக்காகவும் ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

சுற்றுலா, எரிபொருள், நிலக்கரி, எரிவாயு, விமானப் போக்குவரத்து, கல்வி, வர்த்தகம் மற்றும் உரம் உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சியின் பல முக்கியமான பகுதிகள் குறித்து ஜனாதிபதியும் ரஷ்யத் தூதுவரும் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலின் போது ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-இ)

# தெளிவில்லாத அறிவித்தல்களால் கல்விப்புலத்தில் பெரும் குழப்பம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரசாங்கத்தின் தெளிவில்லாத அறிவித்தல்கள் காரணமாக நாட்டில் உள்ள பெருமளவான பாடசாலைகளில் நேற்று ஆசிரியர், மாணவர் வரவு நிலை குறைவாகக் காணப்பட்டதோடு பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மூன்று நாள்கள், ஐந்து நாள்கள் பாடசாலைகளை இயக்குதல் என்ற அரசாங்கத்தின் குழப்பமான அறிவித்தல், வருகைதர முடியாத ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட விடுமுறையாக கணிக்க முடியாது என்ற ஆசிரியர்களுக்குச் சாதகமான அறிவித்தல், அதிபர், ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதியின்மை, சீரற்ற எரிபொருள் விநியோகம், இ.போ.ச. பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு, எரிசக்தி அமைச்சரின் எரிபொருள் இல்லையென்ற அபாயகரமான அறிவித்தல் ஆகிய இத்தகைய நிலைகளைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து மார்க்கங்கள் சீராகும்வரை பாடசாலை செல்வதைத் தவிர்ப்போம் என்று நாம் அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

அதன்படி நாட்டில் உள்ள பெருமளவான பாடசாலைகளில் போக்குவரத்து மார்க்கங்கள் இல்லாத பலர் எமது வேண்டுகோளை ஏற்று பாடசாலைக்குச் செல்லவில்லை. ஒரு சில பாடசாலை அதிபர்கள் ஆசியர்களைக் கட்டாயப்படுத்தி அழைத்த அதே வேளை மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்ததாக எமது சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், வலயச் செயலர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய நிலை தொடராமல் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் சீராக, அரசாங்கம் ஆசிரியர்களுக்கான எரிபொருள் விநியோகம், போக்குவரத்து மார்க்கங்கள் என்பவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகாணவேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த பாடசாலைகளையும் நீண்ட நாள்களுக்கு மூடும்நிலை ஏற்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆள்சேர்ப்புக்கு நேர்முகத் தேர்வு

## வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிப் பயிலுநர்களை வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பன நடத்தப்படவுள்ளன என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்;

முதற் கட்டமாக நுண்கலைப் பட்டதாரிகள் மற்றும் வணிகமாணிப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பன நடைபெறவுள்ளன. தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாணக் கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.in.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பன எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

# உரக் கப்பலும் வருவது தாமதம்

கொழும்பு, ஜூன் 28

யூரியா உரத்தை ஏற்றிய கப்பலின் வருகை மேலும் தாமதமடைவதாக சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி நாட்டுக்கு வரவிருந்த கப்பல் தாமதமாகியுள்ளதால், உரத்தை ஏற்றிய மற்றொரு கப்பல் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாகவும் அது ஜூலை 10ஆம் திகதியளவிலேயே நாட்டை வந்தடையும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஓமானிலிருந்து நாட்டுக்கு வருகைதரவுள்ள கப்பலில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் உள்ளது. இந்தியக் கடனுதவியிலேயே இந்த உரம் கொண்டு வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## சிங்கள...

வெளியிட்டுள்ளனர். இதனையடுத்து அவர் அந்த வீதி வழியாக பயணிக்க முடியாமல் மாற்று வழியால் திரும்பிச் சென்றுள்ளார்.

முன்னாள் கடற்படைத்தளபதியான சரத் வீரசேகர, பௌத்த - சிங்கள இனவாதக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டுவருபவர். நாடாளுமன்றத்தின் கடந்த அமர்வில் உரையாற்றும்போதும் கூட, சிங்கள - பௌத்தர்களின் பொறுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சோதிக்கக் கூடாது என்று பேசியிருந்தார்.

இந்த நிலையில் எரிபொருள் வரிசையில் நின்ற பொதுமக்கள், அந்த வீதியூடாக பயணிக்க முயன்ற சரத் வீரசேகரவுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். ஆபாசமான சைகளால் காண்பித்து அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து அவர் மாற்றுப் பாதையூடாகப் பயணித்தார். (அ-ஒ-5)

## யாழில்...

நகரப் பகுதிக்குச் சென்றவேளை காணாமற்போனதாக அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பெற்றோரை இழந்த நிலையில் உறவினர்களின் பராமரிப்பில் மாணவி வளர்ந்து வந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நகரப் பகுதிக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற மாணவியை வாகனத்தில் சிலர் கடத்திச் சென்றதாக பொலிஸ் முறைப்பாட்டில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மாணவி மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர் பற்றைக்குள் வீசப்பட்டிருந்ததாகவும், பின்னர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் மீட்கப்பட்டு பொலிஸார் ஊடாக கிளிநொச்சி மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதான இரண்டு இளைஞர்களை நேற்று மாலை கைது செய்துள்ளதாக, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். சிறுமி தொடர்பான சட்ட மருத்துவ அறிக்கை இன்று வெளியாகும். (அ-ஒ-125)

## 82% மின்கட்டண...

இதேவேளை- மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில், பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கமைய, இன்று முதல் 3 வாரங்களுக்கு, மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், பொதுமக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், இன்று முதல் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (www.pucsl.gov.lk ) உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு!



**கொழும்பு, ஜூன் 28**

**உலகம் முழுவதும் 5 வயதுக்குட்பட்ட சுமார் 80 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. வறுமை மற்றும் பஞ்சம் காரணமாக இந்தக் குழந்தைகளில் பலர் இறக்கும் நிலையில் உள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உட்டச்சத்துக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ள 80 லட்சம் குழந்தைகளில் பெரும்பாலானவர்கள் 15 நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அங்கு ஏற்பட்டுள்ள கடுமையான உணவு மற்றும் மருத்துவ உதவிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, ஹைதி மற்றும் யேமன் ஆகிய நாடுகள் முக்கியமான இடங்களில் உள்ளன. ஊட்டச்சத்து குறைபாடு என்பது குழந்தைகளுக்கு பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பை ஏற்படுத்துகிறது.

இது 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு அபாயத்தை அதிகரிக்கிறது.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக கூடுதலாக 2 லட்சத்து 60 ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைன் போர், உலகின் சில பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி காரணமாக உணவுப்பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகின்றன. மேலும், கொரோனா காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கமும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது.

இத்தகைய சூழலில், இந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற 1.2 பில்லியன் டொலர் உதவித் தொகை அவசரமாகத் தேவை. ஜி-7 கூட்டத்துக்காக ஜேர்மனியில் கூடியிருக்கும் உலகத் தலைவர்களுக்கு இந்தக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற ஒரு சிறிய வாய்ப்பு உள்ளது. இனியும் வீணடிக்க நேரம் இல்லை, பஞ்சம் அறிவிக்கப்படும்வரை காத்திருப்பது குழந்தைகள் இறக்கும் வரை காத்திருப்பதற்கு சமம் -என்றுள்ளது. (ம)

## பிரசன்ன வீட்டில் தீ பேராசிரியர் கைது

கொழும்பு, ஜூன் 28

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்குத் தீவைத்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் களனிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வண.நெதலகமுவே தம்மதின்ன தேரர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுக்காலை கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார். தேரரிடம் வாக்குமூலம் பெற்றதன் பின்னர் அவரை கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## அக்குரஸ்ஸ பகுதியில் நபரொருவர் படுகொலை!

### இறந்தவரின் தலையுடன் சந்தேகநபர் தப்பியோட்டம்

கொழும்பு, ஜூன் 28

அக்குரஸ்ஸ, திப்போடுவ பிரதேசத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தனது வீட்டில் வைத்து கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலையைச் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர் இறந்தவரின் தலையுடன் தப்பியோடியுள்ளார்.

கொல்லப்பட்ட நபரின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன. இதனால், கொலையாளியின் பெற்றோர் மீது சூனியம் செய்யப்பட்டதாகக் கூறியே குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார். (ம)

## காலி மைதானத்தைச் சுற்றி சிலிண்டர்கள் அணிவகுப்பு

### ஆஸி. டெஸ்ட் ஆட்டத்தை முன்னிட்டு அவற்றை அகற்றும்படி கோரிக்கை



கொழும்பு, ஜூன் 28

அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த ஆட்டம் நடைபெறும் காலி கிரிக்கெட் மைதானத்தின் வெளிப்புறத்தில் எரிவாயு சிலிண்டர்கள் அணிவகுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த மைதானத்தைச் சுற்றி லிட்ரோ எரிவாயு மற்றும் லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் காரணமாக எரிவாயு சிலிண்டர்களை அந்தப்பகுதியிலிருந்து அகற்றுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், பிரதேச வாசிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். எரிவாயு சிலிண்டர்களை வழங்கினால் மாத்திரமே வெளியேறுவோம் என அவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளையும், இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 8ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

வேலையாள்கள் தேவை
கிளிநொச்சியில் உள்ள வியாபார நிலைமொன்றிற்கு பெண் வேலையாள்கள் தேவை. சம்பளம் 20, 000/- வழங்கப்படும்
074 288 5023

வேலையாட்கள் தேவை
நல்லூரில் இயங்கும் Shairah Food City இற்கு வேலையாட்கள் தேவை. (ஆண்/ பெண்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 9637483, 076 2517520 (whatsapp)

விநியோகஸ்தர்கள் தேவை
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ளூரில் துவிச்சக்கரவண்டி மூலம் பத்திரிகைப் பிரதிகளை, கடைகளுக்கு விநியோகம் செய்வதற்கு ஆர்வமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு - 0716182182
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.